இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

"ஒவ்வொரு உலக இளையோர் தினத் தயாரிப்பிலும் பாதுகாவல் புனிதர்கள் முக்கியப் பங்கு வகிக்கின்றனர். இறைவனின் அழைப்பு, நமது திருமுழுக்கு வாக்குறுதி, குருத்துவம், துறவறம் அல்லது திருமண வாழ்வு என அனைத்துப் பணிகளிலும் தாராள மனதோடும் துணிச்சலோடும் கிறிஸ்துவைப் பின்பற்ற இவர்கள் நமக்கு உந்துதல் அளிக்கின்றனர். புனித வாழ்வு என்பது எட்ட முடியாத ஒன்றல்ல என்பதை இவர்கள் உலக இளைஞர்களுக்கு உணர்த்துகிறார்கள்."

# 2027 சியோல் உலக இளையோர் தினத்தை முன்னிட்டு பாதுகாவல் புனிதர்கள் அறிவிப்பு



2027-ஆம் ஆண்டு தென்கொரியாவின் சியோல் நகரில் நடைபெறவுள்ள உலக இளையோர் தினத்திற்கான (World Youth Day) ஐந்து பாதுகாவல் புனிதர்களை விழா ஏற்பாட்டுக் குழுவினர் அறிவித்துள்ளனர். துன்புறுத்தல், புலம்பெயர்வு மற்றும் சமூகப் போராட்டங்களுக்கு மத்தியில் வாழ்ந்த இப்புனிதர்கள், உலகளாவிய இந்தச் சந்திப்பிற்குத் தயாராகும் இளைஞர்களுக்கு வழிகாட்டிகளாகத் திகழ்வார்கள்.

இந்தத் திருவிழாவின் கருப்பொருள்களான உண்மை, அன்பு மற்றும் அமைதி ஆகியவற்றின் அடிப்படையில் இந்தப் புனிதர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதாக சியோல் விழா ஏற்பாட்டுக் குழு தெரிவித்துள்ளது.

### தேர்ந்தெடுக்கப்பட்ட ஐந்து பாதுகாவல் புனிதர்கள்:

* புனித இரண்டாம் ஜான் பால் (Pope St. John Paul II): உலக இளையோர் தினத்தைத் தொடங்கி வைத்தவர்.
* புனித அந்திரேயா கிம் தேகோனும் அவர்தம் தோழர்களும் (St. Andrew Kim Taegon & Companions): தொடக்ககால கொரியத் திருச்சபையின் மறைசாட்சிகள்.
* புனித பிரான்சிஸ் சேவியர் கப்ரினி (St. Frances Xavier Cabrini): புலம்பெயர்ந்தோருக்காகத் தன் வாழ்வை அர்ப்பணித்தவர்.
* புனித ஜோசபின் பக்கீத்தா (St. Josephine Bakhita): அடிமைத்தனம் மற்றும் துன்பங்களுக்கு மத்தியிலும் தளராத விசுவாசத்தோடு வாழ்ந்தவர்.
* புனித கார்லோ அகுத்திஸ் (St. Carlo Acutis): இன்றைய டிஜிட்டல் யுகத்தில் நற்செய்தி அறிவிப்பின் அடையாளமாகத் திகழும் இளைஞர்.

இந்தப் புனிதர்கள் வெவ்வேறு கண்டங்களையும் தலைமுறைகளையும் சேர்ந்தவர்கள். போர், இடப்பெயர்வு, அடிமைத்தனம் மற்றும் நவீன கலாச்சாரச் சவால்களைச் சந்தித்த இவர்களின் வாழ்க்கை அனுபவங்கள், இன்றைய இளைஞர்கள் எதிர்கொள்ளும் எதார்த்தங்களோடு ஒத்துப்போவதாக அமைப்பாளர்கள் கூறுகின்றனர்.

### தேர்ந்தெடுக்கும் முறை

2024-ஆம் ஆண்டின் இறுதியில் நாடு தழுவிய அளவில் இளைஞர்கள் மற்றும் இளையோர் பணியாளர்களிடையே நடத்தப்பட்ட கருத்துக்கணிப்பின் அடிப்படையில் இந்தப் புனிதர்கள் தேர்வு செய்யப்பட்டனர். பின்னர், தன்னார்வத் தொண்டர்கள் இப்புனிதர்களின் ஆன்மீக வாழ்வை ஆழமாகப் பயின்று, அவர்களுக்கான செபங்களையும் அடையாளங்களையும் உருவாக்கினர்.

### கர்தினால் கெவின் ஃபாரெல் அவர்களின் செய்தி

"ஒவ்வொரு உலக இளையோர் தினத் தயாரிப்பிலும் பாதுகாவல் புனிதர்கள் முக்கியப் பங்கு வகிக்கின்றனர். இறைவனின் அழைப்பு, நமது திருமுழுக்கு வாக்குறுதி, குருத்துவம், துறவறம் அல்லது திருமண வாழ்வு என அனைத்துப் பணிகளிலும் தாராள மனதோடும் துணிச்சலோடும் கிறிஸ்துவைப் பின்பற்ற இவர்கள் நமக்கு உந்துதல் அளிக்கின்றனர். புனித வாழ்வு என்பது எட்ட முடியாத ஒன்றல்ல என்பதை இவர்கள் உலக இளைஞர்களுக்கு உணர்த்துகிறார்கள்" என அல்மாயர், குடும்பம் மற்றும் வாழ்வுக்கான பேராயத்தின் தலைவர் கர்தினால் கெவின் ஃபாரெல் இவ்வாறு கூறினார்.

தமிழாக்கம் ஹெரால்டு

# கத்தோலிக்கர்களும் ஆங்கிலிக்கன்களும் பிளவுகளைக் கடந்து தொடர்ந்து இணைந்து செயல்பட வேண்டும்

புதிய கேன்டர்பரி பேராயரை முதன்முறையாகச் சந்தித்த திருத்தந்தை 14-ஆம் லியோ, உலகிற்கு கிறிஸ்துவை அறிவிப்பதில் கத்தோலிக்கர்களும் ஆங்கிலிக்கன்களும் இணைந்து செயல்பட வேண்டும் என்றும், அவர்களுக்கு இடையிலான கருத்து வேறுபாடுகள் மற்றும் சவால்களைக் கடந்து செல்ல முயற்சி செய்ய வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

திங்கட்கிழமை அன்று, கேன்டர்பரி பேராயர் மேதகு சேரா முல்லாலி (Sarah Mullally) அவர்களைத் திருத்தந்தை லியோ சந்தித்துப் பேசினார். பின்னர், திருத்தூதரக அரண்மனையில் உள்ள எட்டாம் அர்பன் செபக்கூடத்தில் (Urban VIII Chapel) அவருடன் இணைந்து செபித்தார். உயிர்ப்புப் பெருவிழாக் காலத்தில் பேராயரை வரவேற்பதில் பெருமகிழ்ச்சி அடைவதாகத் தெரிவித்த திருத்தந்தை, 60 ஆண்டுகளுக்கு முன்பு புனித ஆறாம் பவுல் அடிகளாரும் பேராயர் மைக்கேல் ராம்சேயும் சந்தித்துக்கொண்ட வரலாற்று நிகழ்வை நினைவு கூர்ந்தார். ரோமில் உள்ள ஆங்கிலிக்கன் மையத்தின் (Anglican Centre) பணிகளைப் பாராட்டிய அவர், அதன் இயக்குனர் ஆயர் அந்தோணி பால் அவர்களையும் வாழ்த்தினார்.

### ஆயுதமற்ற அமைதி

கிறிஸ்துவின் உயிர்ப்பு கால வாழ்த்துகளைப் பகிர்ந்து கொண்ட திருத்தந்தை லியோ, உயிர்த்த ஆண்டவரின் அமைதி என்பது "ஆயுதமற்றது" என்று குறிப்பிட்டார். "வன்முறைக்கும் ஆக்கிரமிப்புக்கும் இயேசு எப்போதும் ஆயுதமற்ற முறையிலேயே பதிலளித்தார்; நாமும் அவ்வாறே செய்ய வேண்டும் என்று அவர் நம்மை அழைக்கிறார்," என்று திருத்தந்தை கூறினார்.

### நற்செய்தி அறிவிப்பிற்கு முட்டுக்கட்டை

கிறிஸ்தவர்களிடையே நிலவும் பிரிவினைகள், உலகிற்கு கிறிஸ்துவின் அமைதியைக் கொண்டு செல்லும் நமது ஆற்றலை பலவீனப்படுத்துகின்றன என்று அவர் சுட்டிக்காட்டினார். "நமது போதனைகளை உலகம் இதயப்பூர்வமாக ஏற்க வேண்டும் என்றால், நற்செய்தி அறிவிப்பிற்குத் தடையாக இருக்கும் கல் தடுமாற்றங்களை அகற்றுவதற்கு நாம் இடைவிடாது செபிக்கவும் முயற்சிக்கவும் வேண்டும்," என்றார் திருத்தந்தை.

### ஒன்றிப்பை நோக்கிய பயணம்

நம்பிக்கை மற்றும் அருளடையாள வாழ்வில் முழுமையான ஒன்றிப்பை மீட்டெடுக்க கத்தோலிக்கர்களுக்கும் ஆங்கிலிக்கன்களுக்கும் இடையே பல நிலைகளில் நடைபெற்று வரும் இறையியல் உரையாடல்களைத் திருத்தந்தை நினைவு கூர்ந்தார். இந்த எக்குமெனிக்கல் (திருஅவை ஒன்றிப்பு) பயணம் சிக்கலானது என்றாலும், பல வரலாற்றுப் பிணக்குகளுக்குத் தீர்வுகண்டு நற்பலன்களைத் தந்துள்ளதாக அவர் குறிப்பிட்டார். ஆங்கிலிக்கன் சபையினருக்குள் தற்போது எழுந்துள்ள சில சவால்களைக் குறிப்பிட்ட அவர், "இந்தச் சவால்கள் உலகிற்கு கிறிஸ்துவை நாம் இணைந்து அறிவிப்பதற்குக் தடையாக இருக்க நாம் அனுமதிக்கக் கூடாது" என்று வலியுறுத்தினார்.

### பிரிவினையைக் கடப்பது நம் கடமை

2024-ஆம் ஆண்டு திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் ஆங்கிலிக்கன் சபைத் தலைவரிடம் கூறிய வார்த்தைகளை மேற்கோள் காட்டிய திருத்தந்தை லியோ: "நமது பிரிவினையினால் கிறிஸ்துவை உலகிற்கு அறிவிக்கும் பொதுவான அழைப்பை நாம் நிறைவேற்றத் தவறினால், அது ஒரு பெரும் இடைஞ்சலாக (Scandal) அமையும்" என்றார்.

அதனுடன் அவர் தனது கருத்தையும் இணைத்தார்: "எவ்வளவு கடினமாகத் தோன்றினாலும், நமக்கிடையிலான வேறுபாடுகளைக் களைவதற்கு நாம் தொடர்ந்து உழைக்காமல் இருப்பதும் ஒரு பெரும் குற்றச்சாட்டாகவே முடியும்."

இறுதியாக, பேராயர் முல்லாலியின் வருகைக்கு நன்றி தெரிவித்த திருத்தந்தை, கத்தோலிக்கர்களும் ஆங்கிலிக்கன்களும் தூய ஆவியாரின் வழிகாட்டுதலோடு நட்புடனும் உரையாடலுடனும் தொடர்ந்து பயணம் செய்ய வேண்டும் என்று வேண்டித் தனது உரையை நிறைவு செய்தார்.

தமிழாக்கம் ஹெரால்டு

# அமைதி, உண்மை மற்றும் நீதிக்கான திருத்தூதரக அரசதந்திர சேவை




திருத்தூதரகத் திருஅவை உயர்கல்வி நிறுவனத்தின் (Pontifical Ecclesiastical Academy) 325-வது ஆண்டு நிறைவை முன்னிட்டு அங்கு வருகை தந்த திருத்தந்தை 14-ஆம் லியோ, வத்திக்கான் தூதரகப் பணிக்காகப் பயிலும் குருக்களின் மாண்பு குறித்துப் பேசினார். ஒரு தூதரகக் குரு என்பவர் அமைதியின் தூதுவர் என்றும், அவர் கத்தோலிக்க சமூகத்தை மட்டுமல்லாது, ஒட்டுமொத்த மனித குடும்பத்தையும் பாதுகாக்க அழைக்கப்பட்டவர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஏப்ரல் 27, திங்கட்கிழமை அன்று ரோமில் உள்ள இந்த உயர்கல்வி நிறுவனத்திற்குச் சென்ற திருத்தந்தை லியோ, திருத்தூதரகத் தூதராகக் குருக்கள் "அமைதி, உண்மை மற்றும் நீதிக்குச் சேவை செய்யும் சிறப்பு அழைப்பைக்" கொண்டவர்கள் என்பதை வலியுறுத்தினார். திருத்தந்தையாகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு முன்பு, ஆயர்களுக்கான பேராயத்தின் தலைவராக இருந்தபோதே அவர் இந்த நிறுவனத்திற்குச் சென்றிருந்தது குறிப்பிடத்தக்கது.

### கிறிஸ்துவில் ஒன்றிப்பு

இந்த மகிழ்ச்சியான ஆண்டு நிறைவில் கொண்டாடப்படும் "அர்ப்பணிப்பு மற்றும் சேவையின் வரலாறு" குறித்து திருத்தந்தை தனது ஆழமான நன்றியைத் தெரிவித்தார். உலகெங்கிலும் உள்ள குருக்கள் தங்களின் பணிவான முயற்சிகளால், பல்வேறு பின்னணிகளைக் கொண்டிருந்தாலும் கிறிஸ்துவுக்குள் ஒன்றிப்பை உருவாக்கியுள்ளனர். இந்த ஒன்றிப்பே வத்திக்கான் தூதரகக் குழுவின் (Diplomatic Corps) அடையாளமாகத் திகழ்கிறது என்று அவர் கூறினார்.

### ஒரு மனமாற்றப் பயிற்சி

சட்டம், வரலாறு, அரசியல் அறிவியல் மற்றும் பொருளாதாரம் போன்ற கல்வித் துறைகளில் இந்த நிறுவனம் மேற்கொண்டுள்ள சீர்திருத்தங்கள் குறித்துப் பேசிய திருத்தந்தை, அதைவிட முக்கியமான ஒன்று "தொடர்ச்சியான மனமாற்றம்" என்றார். தூதரகப் பணியில் இருப்பவர்கள் நெருக்கம், செவிமடுத்தல், சான்று பகிர்தல், சகோதரத்துவ அணுகுமுறை மற்றும் உரையாடல் போன்ற பண்புகளை வளர்த்துக்கொள்ள வேண்டும். தாழ்ச்சியோடும் கனிவோடும் இந்தப் பண்புகள் ஒரு குருவின் ஆன்மீகப் பணியில் கலந்திருக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

### வரலாற்றை உருவாக்கும் பாலங்கள்

இந்தக் கல்வி நிறுவனத்தின் வரலாற்றில் இடம்பிடித்த புனிதர்கள் மற்றும் திருத்தந்தையர்களை நினைவுகூர்ந்த திருத்தந்தை, ஒரு தூதரகத் குருவின் தனித்துவமான பணியைச் சுட்டிக்காட்டினார். அவர்கள், "உங்களுக்கு அமைதி உரித்தாகுக!" என்ற உயிர்ப்புப் பெருவிழாவின் செய்தியைத் தாங்கிச் செல்லும் தூதுவர்கள். அமைதிக்கான நம்பிக்கைகள் மங்கிப்போகும் வழலிலும், உயிர்த்த கிறிஸ்துவின் "அமைதியை உங்களுக்கு விட்டுச் செல்கிறேன், என் அமைதியையே உங்களுக்குத் தருகிறேன்" என்ற வார்த்தைகளை உலகிற்கு வழங்க வேண்டியது அவசியம் என்றார்.

"உங்கள் பணி உங்களை 'பாலங்களாகவும்' 'கால்வாய்களாகவும்' இருக்க அழைக்கிறது. இதன் மூலம் விண்ணகத்திலிருந்து வரும் அருள், வரலாற்றின் மடிப்புகளுக்குள் தன் வழியைக் கண்டடையும்," என்று அவர் கூறினார்.

### கிறிஸ்துவின் அன்பின் அடையாளம்

திருத்தூதரகத் தூதரின் மற்றொரு கடமை, கிறிஸ்துவாகிய 'உண்மையை' உலக நாடுகளின் அவைக்குக் கொண்டு செல்வதாகும். அவர் முதலில் ஒரு 'மறைப்பணியாளராகவும்', அதன் பின்னரே ஒரு 'தூதராகவும்' செயல்பட்டு, மக்கள் மீதான இறைவனின் அன்பிற்கு அடையாளமாக இருக்க வேண்டும். சொற்களுக்கு வலிமை உண்டு என்றும், அவை உண்மையை நேரடியாகவும் தெளிவாகவும் வெளிப்படுத்த வேண்டும் என்றும், அப்போதுதான் தவறான புரிதல்கள் இல்லாத உண்மையான உரையாடல் சாத்தியமாகும் என்றும் அவர் மீண்டும் வலியுறுத்தினார்.

### நீதியை மேம்படுத்துபவர்கள்

தூதரகப் பணி என்பது கத்தோலிக்கத் திருஅவையோடு மட்டும் நின்றுவிடாமல், ஒட்டுமொத்த மனித குடும்பத்தையும் தழுவ வேண்டும் என்று திருத்தந்தை கூறினார். "ஒவ்வொரு மனிதருக்குள்ளும் பதிந்துள்ள கடவுளின் சாயலை அங்கீகரிக்கவும், மீட்டெடுக்கவும், பாதுகாக்கவும் உதவும் அனைத்து வகையான நீதியையும் நீங்கள் ஊக்குவிக்க வேண்டும்," என்று அவர் அறிவுறுத்தினார்.

### மனித மாண்பின் பாதுகாவலர்கள்

உலகில் பதற்றங்கள் அதிகரித்து, மோதல்களே தீர்வாகக் கருதப்படும் சூழலில், நாம் மேற்கொள்ளும் உரையாடல் மற்றும் சமரச முயற்சிகள் சில நேரங்களில் பலனற்றதாகத் தோன்றலாம். இருப்பினும், மனித மாண்பைப் பாதுகாப்பதில் நாம் சோர்வடையக் கூடாது என்று திருத்தந்தை கூறினார்.

தனிழாக்கம் ஹெரால்டு

## சபாவில் நடைபெறும் “Perjalanan Salib” (சிலுவைப் பயணம்)

‘Perjalanan Salib’ அல்லது ‘சிலுவைப் பயணம்’ என்பது கிறிஸ்தவ மரபில் மிக முக்கியமான ஆன்மீகப் பயணம். இது இயேசு கிறிஸ்து சிலுவையைச் சுமந்து சென்ற துன்பப் பாதையை நினைவுகூரும் பக்தி நடைமுறையாகும்.

### சபாவில் நடைபெறும் சிலுவைப் பயணத்தின் பின்னணி

சபாவில் இந்த “சிலுவைப் பயணம்” ஒரு தேசிய அளவிலான ஆன்மீகப் பயணமாக (pilgrimage) நடைபெறுகிறது. இது 2025 ஏப்ரல் 3 அன்று Sacred Heart Cathedral-இல் தொடங்கப்பட்டது. இந்த பயணம் சுமார் 18 மாதங்கள் நீடித்து, Malaysia Pastoral Convention 2026 (MPC 2026)-க்கு ஆன்மீக தயாரிப்பாக நடத்தப்படுகிறது.

### சிலுவைப் பயணத்தின் நோக்கம்

இயேசுவின் துன்பங்களை நினைத்து மனமாற்றம் பெறுதல், பாவமன்னிப்புக்காக பிரார்த்தனை செய்தல், விசுவாசத்தை ஆழப்படுத்துதல், சமுதாய ஒற்றுமையை வலுப்படுத்துதல், குடும்பங்களும் இளைஞர்களும் விசுவாசத்தில் வளருதல்.

### சபாவில் நடைபெறும் முக்கிய இடங்கள்

இந்த ஆன்மீகப் பயணம் பல பங்குகளில் (parishes) நடைபெறுகிறது:

1. St. Catherine Church
2. St. Peter Church
3. Labuan Catholic Churches

ஒவ்வொரு இடத்திலும் விசுவாசிகள் ஒன்று கூடி, சிலுவைப் பயணத்தை ஆன்மிக ரீதியாக அனுபவிக்கவிருக்கிறார்கள்.

### சிலுவைப் பயணத்தின் நடைமுறை (Stations of the Cross)

“சிலுவைப் பயணம்” பொதுவாக 14 நிலையங்கள் (Stations) கொண்டது. ஒவ்வொரு நிலையமும் இயேசுவின் துன்ப வாழ்க்கையின் ஒரு நிகழ்வை குறிக்கிறது.

### ஒவ்வொரு நிலையத்திலும்:

வேதாகம வாசகம், தியானம், ஜெபம், பாடல்கள் இடம்பெறவிருக்கின்றன.

### சபாவில் நிகழ்ச்சியின் அமைப்பு

பொதுவாக இந்த நிகழ்ச்சி, திருப்பலி (Mass), புகழ் மற்றும் ஆராதனை (Praise & Worship), பாவமன்னிப்பு ஜெபம், Divine Mercy ஜெபம், சிலுவைப் பாதை நடை, இறுதியில் ஆசீர்வாதம் என அமைக்கப்பட்டிருக்கிறது.

### ஆன்மீக முக்கியத்துவம்

இந்த “சிலுவைப் பயணம்” ஒரு சாதாரண நிகழ்வு அல்ல. இது துன்பத்தில் இருக்கும் மக்களுக்கு நம்பிக்கை அளிக்கிறது. இயேசுவின் தியாகத்தை நமக்கு நினைவூட்டுகிறது. நம்முடைய வாழ்க்கையை மாற்றும் ஒரு ஆன்மீக அனுபவமாக மாறுகிறது சபாவில் நடைபெறும் “Perjalanan Salib” என்பது ஒற்றுமை, விசுவாசம், மனமாற்றம் ஆகியவற்றை வளர்க்கும் ஒரு சக்திவாய்ந்த ஆன்மீக பயணம். இது தனிப்பட்ட வாழ்க்கையையும், சமூகத்தையும் மாற்றும் ஒரு அரிய வாய்ப்பு.

தமிழக்காம் ஹெரால்டு

## விசுவாசம், ஒற்றுமை மற்றும் சேவையில் கத்தோலிக்கக் காவல்துறை அதிகாரிகள் உறுதி





கோலாலம்பூர்: மலேசிய அரச காவல்துறையின் (PDRM) 219-வது ஆண்டு நிறைவையொட்டி, காவல்துறையில் பணியாற்றும் கத்தோலிக்கக் கிறிஸ்தவர்கள் பல்வேறு பங்குத்தளங்களில் ஒன்று கூடி செபத்திலும் ஐக்கியத்திலும் ஈடுபட்டனர். பொதுச் சேவையில் விசுவாசத்தின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்தவும், காவல்துறைக்கும் பொதுமக்களுக்கும் இடையிலான உறவை வலுப்படுத்தவும் இந்த நிகழ்வுகள் அமைந்தன.

### புனித யோவான் பேராலயத்தில் சிறப்புத் திருப்பலி

கோலாலம்பூரில் உள்ள புனித யோவான் பேராலயத்தில் (St John’s Cathedral) நடைபெற்ற சிறப்புத் திருப்பலியில், பணியில் உள்ள மற்றும் ஓய்வுபெற்ற சுமார் 600 காவல்துறை அதிகாரிகள் கலந்துகொண்டனர். மலேசிய கூட்டரசுப் பிரதேசத்தின் பிரதமரின் துறை அமைச்சரான ஹன்னா இயோ அவர்களும் இந்நிகழ்வில் கலந்து கொண்டார். அவரை புக்கிட் அமான் குற்றப் புலனாய்வுத் துறையின் துணை இயக்குநர் டி.சி.பி டத்தோ டென்னிஸ் லிம் குவாங் கெங் மற்றும் அவரது மனைவி டத்தின் டான் யான் நீ ஆகியோர் வரவேற்றனர். கோலாலம்பூர் பேராயர் ஜூலியன் லியாவ் பெங் கிம் தலைமையில், பங்குத்தந்தை ஜெரார்ட் திரவியம் ஆகியோரின் பங்கேற்புடன் இத்திருப்பலி நடைபெற்றது. காவல்துறை பணியாளர்கள் அனைவருக்கும் இறைவனின் ஆசீரும் பாதுகாப்பும் கிடைக்க வேண்டியும், தேசப்பணியில் அவர்களுக்கு மன வலிமையும் பாதுகாப்பும் வேண்டியும் சிறப்புச் செபங்கள் ஏறெடுக்கப்பட்டன.





### தம்பின் புனித ஜோன் மேரி வியான்னி ஆலயம்

நெகிரி செம்பிலான் மாநில அளவிலான காவல்துறையினரின் செபக் கூட்டம் ஏப்ரல் 16, வியாழக்கிழமை அன்று தம்பின், புனித ஜோன் மேரி வியான்னி தேவாலயத்தில் நடைபெற்றது. சமூகத்தைப் பாதுகாப்பதிலும் அமைதியை நிலைநாட்டுவதிலும் காவல்துறை அதிகாரிகள் காட்டும் அர்ப்பணிப்பு மற்றும் தியாகம் ஆகியவற்றை கௌரவிக்கும் வகையில் இந்த வழிபாடு அமைந்தது. அதிகாரிகள் தங்கள் குடும்பத்தினருடனும் பங்கு மக்களுடனும் இணைந்து நன்றியறிதல் செபத்தில் ஈடுபட்டனர்.

### 'லூர்து அன்னை' ஆலயத்தில் விழிப்புணர்வுப் பணி (HPP)

கிள்ளான் தெற்கு மாவட்டக் காவல்துறை சார்பில், ஏப்ரல் 22 அன்று கிள்ளான் லூர்து அன்னை தேவாலயத்தில் 'உயர்நிலை காவல்துறை விழிப்புணர்வு' (High Profile Policing - HPP) எனும் சிறப்புத் திட்டம் மேற்கொள்ளப்பட்டது. கிள்ளான் தெற்கு மாவட்ட போலீஸ் தலைமை அதிகாரி ஏ.சி.பி லிம் ஜித் ஹுய் தலைமையில் இந்த நிகழ்வு தொடங்கியது. இதில் ஓய்வுபெற்ற டி.சி.பி டத்தோ டான் சோங் ஜின் மற்றும் பல அதிகாரிகள் கலந்துகொண்டனர். பங்குத்தந்தை கிரகோரி சான், உதவிப் பங்குத்தந்தை செல்வா மற்றும் திருஅவை தலைவர்கள் இதில் பங்கேற்றனர்.

தமிழாக்கம் ஹெரால்டு

## ஆவியில் வாழ்வு கருத்தரங்கு

கோலாலம்பூர் புனித அந்தோணியார் பங்கின் 115 வது ஆண்டு நிறைவை ஒட்டி மக்களை முன் தயாரிப்புக்காக மூன்று மொழிகளில் அருங்கொடை மறுமலர்ச்சி கூட்டங்கள் தனித்தனியாக அந்தந்த மொழிகளில் நடைபெற்றன. இதன் மூலம் மக்கள் விசுவாச வாழ்க்கையிலும் ஆன்மீக வாழ்க்கையிலும் பலப்படத் தூண்டுதலாக கருத்தரங்கு அமைந்தது.

கடந்த ஏப்ரல் 18, 19ஆம் திகதிகளில் APC அரங்கில் அதிமேற்றாசன தமிழ் அருங்கொடை மறுமலர்ச்சிக் குழுவினர் ஆவியில் வாழ்வு கருத்தரங்கை நடத்தினர். இதில் சுமார் 75 பேர் மேல் கலந்து கொண்டார்கள். 9 தலைப்புகளில் இரண்டு நாள் கருத்தரங்கு தூய ஆவியாரின் வழிநடத்துததால் நடைப்பெற்றன. இதில் புகழ்ச்சி ஆராதனை சொற்பொழிவுகள் மற்றும் குழு பகிர்வுகளும் இடம்பெற்றன. முதல் நாள் இறுதியில் திவ்ய நற்கருணை ஆராதனையுடன் இறைபுகழ்ச்சி இடம்பெற்ற வேளையில் கலந்துக் கொண்ட அநேக ஆத்துமாக்கள் தூய ஆவியின் அருள்பொழிவைப் பெற்று அயல் மொழிகளில் பேசினார்கள் .நிறைய உள்ளங்கள் மனம் மாறி சாட்சியங்கள் கூறினது மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. சிலர் அவர்களுடைய சாட்சியத்தில் தவறான பாதையில் சென்றிருந்தாலும் இந்த ஆராதனை வழி செய்த தவறுகளை உணர்ந்து கிறிஸ்துவுக்குள் மீட்பின் மகிழ்ச்சியை உணர முடிந்ததை வெளிப்படுத்தினர். இந்த இரண்டு நாட்களிலும் பொறுப்பாளர்கள் மக்கள் சோர்வடையாமல் இருக்க நகைச்சுவையோடு வழி நடத்தினார்கள்,

ஒரு பங்கு வளர்ச்சி அடைவதற்கு மூலக் காரணம் மக்களுடைய விழிப்புணர்வு, அது இந்த நிகழ்ச்சி மூலம் கிடைக்கப்பெற்றதைக் கண்டுணர்ந்தோம். குறிப்பாக நம்முடைய புனித அந்தோணியார் தேவாலயத்தின் அருங்கொடை குழுவினர், மக்களுக்கு உணவுப் பரிமாறி, நிகழ்வுக்கு தேவையான உதவிகளைச் செய்தனர். ஏற்பாட்டுக் குழுவினருக்கும், பங்கு குருவானவருக்கும், சகோ தெரென்ஸ், சகோ அருமை, சகோ மைக்கல், சகோ சில்வஸ்டர், புகழ் ஆராதனையை வழிநடத்தியவர்கள், இசைக் கருவிகளை வாசித்தவர்கள், பாடல்களைப் பாடிய குழுவினர் அனைவருக்கும் உள்ளத்தின் ஆழத்திலிருந்து நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஏற்பாட்டுக் குழுவினர்

## பாஸ்கா 6ஆம் வாரம் – ஞாயிறு

**தி.பணிகள் 8: 5-8, 14-17; 1 பேதுரு 3: 15-18**
**யோவான் 14: 15-21**

### கிறிஸ்துவுக்காகத் துன்புறுவோர் வாழ்வுப் பெறுவர்!

இன்று பாஸ்கா காலத்தின் ஆறாம் ஞாயிறுவில் இணைந்துள்ளோம். கிறிஸ்துவை ஆண்டவராகக் கொண்டு, அவரை என்றென்றும் போற்றி வாழ நாம் அழைக்கப்படுகிறோம்.

இன்றைய முதல் வாசகத்தில் திருத்தொண்டர்களுள் ஒருவரான பிலிப்பு சமாரியர்களுக்கு நற்செய்தி அறிவித்து, அவர்களும் தூய ஆவியைப் பெற்றுக்கொள்ளக் காரணமாக இருக்கின்றார். திருவிவிலியத்தில் இந்தப் பிலிப்புதான் முதன்முறையாக நற்செய்தி அறிவிப்பாளர் என அழைக்கப்படும் சிறப்புக்குச் சொந்தக்காரர் ஆகின்றார் (திப 21:8). இயேசுவின்மேல் கொண்ட அன்பே இவரை நற்செய்திப் பணிக்குத் தூண்டியது எனலாம்.

அடுத்து வரும் இரண்டாம் வாசகத்தில், நம்முடைய வாழ்க்கையில் இயேசு கிறிஸ்து முதன்மையானவராக இருக்க வேண்டும் என்ற செய்தி வலயிறுத்தப்படுகிறத்து. ஆம், “உள்ளத்தில் கிறிஸ்துவை ஆண்டவராகக் கொண்டு, அவரைத் தூயவரெனப் போற்றுங்கள்” என்ற வார்த்தைகளை புனித பேதுரு வழங்குகிறார். எனவே, ஏன் கிறிஸ்தவர்களாக இருக்கிறோம், நமக்குள்ள நம்பிக்கை என்ன என்று கேள்வி எழுப்புவோருக்கு தெளிவாக, துணிவோடு கிறிஸ்து நமக்கு யார் என்பதை எடுத்துரைக்க வேண்டும் என அறிவுறுத்தப்படுகிறோம்.

இன்றைய நற்செய்தியில் இயேசு, “நீங்கள் என்மீது அன்பு கொண்டிருந்தால், என் கட்டளைகளைக் கடைப்பிடிப்பீர்கள்” என்கிறார். இயேசுவின்மீது அன்பு கொண்டிருக்கும் ஒருவராலேயே அவரது கட்டளைகளைக் கடைப்பிடிக்க முடியும். அவ்வாறு இயேசுவின்மீது கொண்ட அன்பினால் அவரது கட்டளையைக் கடைப்பிடிக்கும் ஒருவர், அவர் பொருட்டு எத்தகையத் துன்பங்களையும் தாங்கிக் கொள்வார். ஏன்; அவருக்காக எதை வேண்டுமானாலும் செய்வார் என்று யோவான் நமது கிறிஸ்தவ வாழ்வுக்கு நல்வழி காட்டுகிறார்.

மூன்று வாசகங்களையும் ஒருமித்தே பார்க்கும்போது, இயேசுவின்மீது அன்பு கொண்டிருக்கும் ஒருவராலேயே அவரது கட்டளையைக் கடைப்படிக்க முடியும்; அவருக்காகத் துன்புற முடியும்; அவரது நற்செய்தியை மற்றவருக்கு அறிவிக்க முடியும் என அறிய வருகிறோம். கிறிஸ்தவ வாழ்வில், “நல்லதைச் செய்து துன்பப்படுவதானது, தீமையைச் செய்து துன்பப்படுவதைக் காட்டிலும் மேலானது என்ற சிந்தனை நம்மில் இன்று ஊற்றெடுக்க வேண்டும்.

ஆகவே, கிறிஸ்துவை வாழ்க்கையின் மையமாக வைத்துக்கொள்வதோடு, நாம் ஏன் கிறிஸ்தவர்களாக இருக்கிறோம், நமக்குள்ள நம்பிக்கை என்ன என்பதைக் கேட்பவர்களுக்கு தெளிவாகவும் எள்ளளவும் தயக்கமின்றியும் எடுத்துரைக்க வேண்டும். இல்லையேல் நாம் பெற்ற திருமுழுக்குப் பொருளற்றதாகிவிடும்.

நிறைவாக, இயேசுவின்மீது அன்பு கொண்டிருக்கும் ஒருவராலேயே அவரது கட்டளைகளைக் கடைப்பிடிக்க முடியும் என்பதால், அவர் பொருட்டு எத்தகைய துன்பங்களையும் தாங்கிக் கொள்ளும் மனநிலையை நாம் கொண்டிருக்க வேண்டும்.

ஆர்.கே. சாமி, சிரம்பான்

**பங்குச் செய்திகளை அனுப்ப அழைக்கிறோம்**

உங்கள் பங்குகளில் நடைபெற்ற சமீபத்திய நிகழ்வுகளைக் குறித்து செய்திகள் புகைப்படங்கள் வரவேற்கப்படுகின்றன. உங்கள் படைப்புகளை tamil@herald.com.my என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். திரு அவையின் மக்களின் வாழ்வையும் நம்பிக்கையையும் வெளிப்படுத்த உதவியமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.